**Kanton St.Gallen**
**Kompetenzzentrum Integration und Gleichstellung**

**mehr Sprache.**
Kanton St.Gallen

# என்னுடன் பேசுங்கள்; அத்துடன் நான் கூறுவதைக் கேளுங்கள்!

நமது பிள்ளைகள் பேசப்பழகுவதற்கு,
நாம் அவர்களுக்கு எவ்வாறு
ஆதரவளிக்கலாம் என்பதற்கான
12 வழிகாட்டல்கள்

பெற்றோருக்கான ஒரு கையேடு

0 - 4 வயது

தமிழ்

Departement des Innern

# அன்பான பெற்றோருக்கு,

உங்கள் பிள்ளையின் பிறப்பையிட்டு மனமார்ந்த வாழ்த்துக்கள். காத்திருந்த நீண்ட காலம் முடிவடைந்து விட்டது. இறுதியில் உங்கள் பிள்ளையை உங்கள் கைகளில் ஏந்திக் கொள்ள முடியும். உறவினரிடமிருந்தும், தெரிந்தவர்களிடமிருந்தும், நண்பர் வட்டத்துக்குள்ளிருந்தும் நிச்சய-மாக நீங்கள் நிறைந்த வாழ்த்துக்களைப் பெற்றிருப்பீர்கள். அவ்வேளைகளில் உங்கள் பிள்ளையின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்றும், அதற்கு நீங்கள் எவ்வாறு மிகச் சிறப்பாக உறுதுணையாக இருக்கலாம் என்பது பற்றியும், அவ்வப்போது உங்களுக்குக் கேள்வி எழுந்திருக்கும்.

பெற்றோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைக்கு மிகச் சிறந்ததைக் கொடுக்க விரும்புவீர்கள். பிள்ளைவளர்ப்பின் போது, அடிக்கடி புதிய சவால்களைச் சந்திக்க வேண்டி வருவதுடன், சிலவேளைகளில், பிள்ளையின் நலனைக் கருத்திற்கொண்டு முடிவுகளை எடுக்கும்போது, எதிர்பார்ப்புகள் அளவுக்கதிகமாகி விட்டதாகப் பெற்றோர் உணர்வதும் உண்டு. இவ்வாறு பல பெற்றோருக்கு ஏற்படுவதுண்டு.

ஒரு முக்கிய வினாவின்போது, இக்கையேட்டினூடாக நாம் உங்களுக்கு உதவியாக இருக்க விரும்புகின்றோம். "என்னுடன் பேசுங்கள்; அத்துடன் நான் கூறுவதைக் கேளுங்கள்!" என்னும் கையேடானது, உங்கள் பிள்ளையின் முதலாவது வயதுக்குள்ளேயே அது பேசக் கற்றுக்கொ-ள்வதற்கு, நீங்கள் எவ்வாறு உதவியளிக்கலாம் என்பது பற்றித் தகவல் தருகின்றது.

ஒரு மனிதனது மொழிவிருத்திக்கு மிக முக்கியமானது அவனது ஒரு வயதுக்குட்பட்ட காலகட்டம். பெற்றோராகிய நீங்கள், உங்கள் பிள்ளைகள் பேசும் பொழுதும் மொழிகளைப் பயிலும் பொழுதும் மிக நன்றாக ஆதரவளிக்க முடியும். மொழியும், மொழியை வளமாகப் பயன்படுத்துவதும் இன்றும், எதிர்காலத்திலும் எமது சமூக வாழ்க்கைக்கு முக்கியமானதும் ஒரு நல்ல தொழிலைச் செய்வதற்கு இன்றியமையாததுமாகும்.

நீங்கள் டொய்ச்மொழி பேசி வளர்ந்தவராக இல்லாதிருந்தால், அல்லது வயது வந்தபின் டொய்ச்-மொழி பயின்றவராக இருந்தால், நான் எவ்வாறு எனது பிள்ளைக்குப் பேசப்பழக உதவி புரியலாம் எனச் சிலவேளை நீங்கள் உங்களையே கேட்டிருக்கலாம். அது சம்பந்தமாக, எமது கையேட்டில் நீங்கள் பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இக்கையேடு – பல நடைமுறைச் சாத்தியமான குறிப்புகளையும் –, இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மொழிகளுடன் பிள்ளைகள் எவ்வாறு நன்கு வளரலாம் என்பது பற்றிய தகவல்களையும் வழங்குகின்றது.

பிள்ளைகள் பேசக்கற்றுக்கொள்ளும் போது, அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது ஒரு கலையல்ல. இந்தக் கையேட்டை நீங்கள் வாசிக்கும்போது, அதனை அறிந்துகொள்வீர்கள். ஆனால், அதற்கு உங்கள் கவனமும் உங்கள் செயற்பாடும் தேவை. அதனால் இக்கையேட்டை நீங்கள் ஒருமுறை மட்டும் வாசித்தால் போதாது. இக்கையேட்டை உங்கள் வழித்துணையாக வைத்திருங்கள். உங்கள் பிள்ளையின் முதலாவது வாழ்க்கைப்பருவத்தில் ஒரு நல்ல ஊக்குவிப்பை நீங்கள் வழங்க, உங்களுக்கு இக்கையேடு உதவுவதை, நீங்கள் அவ்வப்போது கண்டு கொள்வீர்கள்.

**உங்கள் பிள்ளையுடன் மிக ஆனந்தமாக இருப்பது உட்பட, அனைத்துக்கும் St.Gallen ஒன்றிணைவுக்கும் சமநீதிக்குமான அதிகார மையம் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது!**

## உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் பிள்ளையின் ஒரு நல்ல மொழிவிருத்தியை, கர்ப்பகாலத்திலிருந்தே நீங்கள் ஊக்குவிக்க முடியும்.

# 1. ஹலோ, நீங்கள் என்னைப் பார்க்க முடியாது, ஆனால் நீங்கள் கூறுவதை என்னால் கேட்க முடியும்!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- 4 ஆம் மாத கர்ப்பகாலத்தின் பின், பிள்ளை குரலொலிகளை, அதிலும் தாயின் குரலை உணரத் தொடங்கும்.

- பிறப்புக்கு முன்பே தாய்மொழியின் தாளலயம் ஒரு பிள்ளையில் பதிந்து விடுகின்றது. இசையும் இரைச்சல்களும் கூட, தாயின் வயிற்றிலிருக்கும் போதே செல்வாக்குச் செலுத்துகின்றன.

- பிள்ளையின் ஆரம்பகால வாழ்க்கைப்பருவத்தில், பெற்றோரே அதனது மொழிவழிகாட்டி ஆவர். அதனால், கர்ப்பகாலத்தின்போதே, எந்த மொழியில் - சிலவேளைகளில் எந்த மொழிகளில் பெற்றோர் தமது பிள்ளையுடன் பேச விரும்புகின்றனர் என்பதைப் பற்றிச் சிந்திப்பது அவசியம்.

## அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

**உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:**

உங்களைப் பற்றிக் கர்ப்பத்திலிருக்கும் பொழுதே, உங்கள் பிள்ளைக்கு விபரியுங்கள். உங்கள் மனதைத் தொடும் விடயங்களை அதனிடம் விபரியுங்கள்.

**உங்கள் பிள்ளையுடன் எந்த மொழியில் (அல்லது எந்த மொழிகளில்) வீட்டில் பேச விரும்புகின்றீர்கள் என்பது பற்றித் தீர்மானிப்பதற்கு, கீழ்வரும் ஆலோசனைகள் உங்களுக்கு உதவியாக இருக்கும்:**

எந்த மொழியில் பேசும்போது நீங்கள் சந்தோசமாக இருக்கின்றீர்களோ, எந்த மொழியை நீங்கள் மிகச் சரளமாகப் பேசுகின்றீர்களோ, அந்த மொழியில் உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள். அந்த மொழியில் நீங்கள் உங்கள் பிள்ளைக்கு அதிக மொழியறிவைக் கொடுக்கலாம். அதன் மூலம், உங்கள் பிள்ளை தனது வாழ்வில் இன்னும் கற்கவிருக்கும் இதர மொழிகளுக்கான அடித்தளத்தை இடுகின்றீர்கள்.

**பெற்றோராகிய நீங்கள், வெவ்வேறுபட்ட மொழிகளை நன்றாகப் பேசுவீர்களாயின், உங்கள் பிள்ளைக்கு அது ஒரு பெறுமதி மிக்க ஆரம்பச் சூழலாகும். பெற்றோரில் யார் எந்த மொழியை நன்றாகப் பேசுகின்றாரோ, அவர் அந்த மொழியில் பிள்ளையுடன் பேச வேண்டும். இதன்மூலம் உங்கள் பிள்ளைக்கு இரண்டு மொழிகளுக்கான நல்ல வழிகாட்டிகள் இருப்பர்.**

நீங்கள் எந்த மொழியைக் குடும்பத்துக்குள் பேசும் மொழியாக முடிவெடுத்தாலும், இந்த நாட்டு மொழியான டொய்ச்சை உங்கள் பிள்ளை கற்பது மிக முக்கியம். இங்கு இன்பமாக வாழ்வதற்கு, நண்பர் நண்பிகளைத் தேடிக்கொள்வதற்கு, அத்துடன் ஒரு நல்ல கல்வியறிவைப் பெறுவதற்கு நல்ல டொய்ச் அறிவு தேவை. நீங்கள் வீட்டில் அன்றாடம் வேறு ஒரு மொழியைப் பேசினாலும் கூட, உங்கள் பிள்ளையினால் டொய்ச்சை நன்றாகக் கற்க முடியும்.

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் உங்கள் பிள்ளையுடன் பேசுகின்ற மொழி, உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த மொழியாக இருக்கும் பட்சத்தில், உங்கள் பிள்ளையால் அதனை நன்றாகக் கற்க முடியும்.

# 2. அம்மாவின் மொழி நன்று! – அப்பாவின் மொழி நன்று!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- பொதுவான விருத்திக்கும், மொழி விருத்திக்கும் ஒரு நல்ல உணர்வுபூர்வமான உறவு முக்கிய அடித்தளமாகும். பெற்றோர் தன்னுடன் பேசுகின்ற மொழியில் தாம் திருப்தியாகவும் நிச்சயமாகவும் இருக்கின்றனரா என்பதை பிள்ளையினால் இங்கு உணர முடியும்.

- பெற்றோர் எவ்வளவு நன்றாக மொழியைப் பேசி, அதனைத் தமது பிள்ளைக்கும் வழங்குகின்றார்களோ, அவ்வளவுக்கு அது பிள்ளையின் மொழிவிருத்திக்கு நல்லது.

- தாய்மொழியை நன்கு பேசுவது, இதர மொழிகளைப் பயில்வதற்கான ஒரு நல்ல அடித்தளமாகும். ஒவ்வொரு மொழியும் உலகைப் பற்றிய அறிவைக் கொண்டுள்ளது; மொழியூடாக இந்த அறிவை நாம் நமது பிள்ளைகளுக்கு வழங்கலாம்.

## அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

**உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:**

உங்களால் மிகச் சரளமாகப் பேசக் கூடிய மொழியை அல்லது பேச்சுமொழியை உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்.

உங்கள் பிள்ளையுடன் நிறையப் பேசுங்கள், அத்துடன் அவர் கதைப்பதற்கும் நிறைய நேரம் கொடுங்கள்.

**உங்கள் தாய்மொழிக் கதைகள், பாடல்கள் அல்லது சிறுவர்விளையாட்டுக்களை விபரிப்பதுடன், உங்களைப் பற்றியும், உங்கள் தாய்நாடு பற்றியும் உங்கள் பிள்ளைக்கு விபரியுங்கள். பிள்ளைகள் தமது பூர்வீகம் பற்றி அறிந்திருப்பது, முக்கியமாகும்.**

உங்கள் பிள்ளைகளுக்கு இதர மொழிகளுக்கான சாதகமான வழிகளைத் திறந்து விடுங்கள். நீங்கள் நல்ல உதாரணமாக இருங்கள்! மொழி கற்றல், உங்கள் மொழியையும் டொய்ச்சையும் பேணுதல் போன்ற, மொழி சம்பந்தமான சாதகமான நிலைப்பாட்டை நீங்கள் கொண்டிருப்பீர்களானால், உங்கள் பிள்ளையும் அதனைக் கடைப்பிடிக்கும்.

## உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் பிள்ளையின் மொழி வளர்ச்சிக்கு தன்னம்பிக்கை சிறப்பான அத்திவாரம்.

# 3. நான் எப்படியோ, அப்படியே அந்த அன்புக்குப் பெறுமதியானவன்(ள்)!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- ஒரு பிள்ளையின் விருத்திக்கும், அது பேசப்பழகுவதற்கும் பிரத்தியேகமாகப் பெற்றோரது கவனிப்புத் தேவை. தன்மீது அன்பு செலுத்தப்படுவதையும், தான் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதையும் அது அனுபவித்து உணர்ந்து கொள்வதனூடாகத்தான் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள முடியும். இந்தச் சக்திதான் அதனது வளர்ச்சிக்கான திறவுகோல்.

- ஒரு பிள்ளைக்குப் பாதுகாப்பும் தேவை. தான் கூறுவதைக் கேட்பதற்குப் பெற்றோருக்கு எப்போது நேரமில்லை, ஏன் நேரமில்லை என்பதும், அவர்களுக்குத் தன்னைக் கவனிக்க மீண்டும் எப்போது நேரமுண்டு என்பதும், ஒரு பிள்ளைக்குத் தெரிய வேண்டும். ஏன் சில விடயங்கள் அப்படித்தான் அல்லது அது சாத்தியமில்லை என்பது அதற்குத் தெரிய வேண்டும்.

# அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

**உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:**

உங்கள் பிள்ளையுடன் தொடர்பாடுவதற்கும், உரையாடலில் பங்குகொள்வதற்கும், அன்றாடம் பல வாய்ப்புக்கள் உண்டு. அவ்வாறு பேசுவதனூடாக நீங்கள் முதலாவது நாளை ஆரம்பிக்கலாம் அல்லது ஆரம்பியுங்கள்.

**நீங்கள் பிள்ளையுடன் என்ன செய்துகொண்டிருக்கின்றீர்கள் என்பதை அதற்கு விபரியுங்கள். பிள்ளை ஏதாவது சத்தம் செய்தால், அதற்கு உங்கள் எதிர்விளைவைக் காட்டுங்கள். அத்துடன் அதனையிட்டு நீங்கள் சந்தோசப்படுவதை அதற்குத் தெரியப்படுத்துங்கள்.**

குறிப்பிட்டுச் சொல்ல முடியாத நேரத்துக்குப் பிள்ளையைச் சமாதானப்படுத்த வேண்டாம். பிள்ளைக்கு அது அவநம்பிக்கையை உண்டாக்கும். பிள்ளைக்கு வாக்குக்கொடுத்தீர்களானால், அதனைக் கடைப்பிடியுங்கள்.

உங்கள் பிள்ளை கூறுவதைக் கேளுங்கள், அதனுடன் பேசுங்கள் அத்துடன் அதனைப் புகழுங்கள்! உங்கள் பிள்ளை அனுபவித்ததை விபரிக்க விடுங்கள். அது கதைத்து முடியும் மட்டும் விடுங்கள்; அதனை இடைமறிக்க வேண்டாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

பிள்ளைகளுக்கு இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மொழிகளுடன் வளர்வது சுமையாக இருக்கமாட்டாது.

# 4. எனது தலைக்குள் இரண்டு அல்லது அதற்குமதிகமான மொழிகளுக்கும் இடமிருக்கின்றது!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- பிள்ளைகள் இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மொழிகளுடன் பிரச்சினையின்றி வளர்வார்கள் - சில நாடுகளில் வாழ்கின்ற இலட்சக்கணக்கான பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கையில் பல மொழிகள் பேசப்படுகின்றன. பிள்ளையின் வளர்ச்சியில் அது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை.
- பல மொழி பேசுகின்ற பிள்ளைகளும், ஒரு மொழியைப் பேசுகின்ற பிள்ளைகள் போலவே வளர்வார்கள் - வெவ்வேறு விதமாக. சிலர் முன்கூட்டியே பேசுவார்கள், சிலர் தாமதித்துப் பேசுவார்கள், சிலர் அதிகம் பேசுவார்கள், சிலர் குறைவாகப் பேசுவார்கள்.
- ஒரு பிள்ளையின் மொழிவளர்ச்சி இயக்கத்தொழிற்பாடுடையது. மொழியைக் கற்றுக்கொண்டே செல்லும் வழியில், புதியதைக் கற்பதுடன், அதனைப் பழயவற்றுடன் இணைத்தும்கொள்ளும். மொழிகளைக் கலப்பதென்பது இந்த வளர்ச்சியின் ஒரு பகுதி.
- ஒரு பிள்ளை நீண்ட காலத்துக்கு எந்த முன்னேற்றமும் இல்லாமல் இருந்தால், அல்லது பேசுவதை நிறுத்திக்கொண்டால், அதனைக் கவனத்திலெடுத்து, ஒரு வைத்தியருடன் அல்லது ஒரு நிபுணருடன் கலந்துரையாட வேண்டும்.
- ஒரு பிள்ளை தனி ஒரு மொழியுடன் மாத்திரம் வளர்ந்தால், மற்றைய எல்லா மொழிகளிலும், விழிப்புடன் அதற்கு ஆதரவு தேவைப்படும். பெற்றோர் முற்றாக வெவ்வேறுபட்ட முறைகளில், அவர்களது பிள்ளைகளுக்கு வெற்றியளிக்கக் கூடிய அநேக பங்களிப்பை வழங்க முடியும்.

# அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

## உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:

உங்கள் பிள்ளையை நீங்கள் உங்கள் தாய்மொழியில் உதாரணமாக துருக்கிய, பொஸ்னிய/குரேஷிய/சேர்பிய, குர்திஷ், ருஷ்ய, ஸ்பானிய, ..., மொழியில் வளர்க்கின்றீர்கள் அத்துடன் அதனது சுற்றுச்சூழலிலுள்ள மொழி டொய்ச்? அப்படியானால் உங்கள் மொழியில் உங்கள் பிள்ளையுடன் நிறையப் பேசுங்கள். ஆனால் டொய்ச்மொழி பேசும் உங்கள் அயலவர்களுடனும் உங்கள் தொடர்பைப் பேணுங்கள். டொய்ச்மொழி பேசும் நண்பர், நண்பிகளை உங்கள் பிள்ளை தேடிக்கொள்ள, அதற்கு உதவுங்கள். உங்கள் பிள்ளையை ஒரு பாலர்விளையாட்டுக்குழுவுக்கு செல்ல அனுமதியுங்கள். அது பிள்ளையின் வளர்ச்சியை ஊக்குவிக்கும். எவ்வளவு விரைவாக டொய்ச் மொழி பேசும் பிள்ளைகளுடன் தொடர்பு ஏற்படுகின்றதோ, அவ்வளவு விரைவாகவும், இலகுவாகவும் இரண்டாவது மொழியைக் கற்க முடியும்.

பெற்றோராகிய நீங்கள் இரண்டு மொழிகளை மிக நன்றாகப் பேசுவீர்களா? அப்படியாயின், பிள்ளைக்கு ஒரு "அம்மா மொழி" யும் ஒரு "அப்பா மொழி" யும் பேசப் பழக வாய்ப்புண்டு. அப்போது ஒரு தெளிவான மொழிஒழுங்கு இருப்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். அதிலும் இது சிறிய பிள்ளைகளுக்கு முக்கியம். அம்மா தனது மொழியான "அம்மா மொழி" யிலும், அப்பா தனது மொழியான "அப்பா மொழி" யிலும் பிள்ளையுடன் பேச வேண்டும். அப்படியானால் பிள்ளை குறிப்பிட்ட நபருடன் குறிப்பிட்ட மொழியில் தொடர்பை வைத்திருக்க முடியும். தனது தலைக்குள் மொழிகளை ஒழுங்குபடுத்த இது பிள்ளைக்கு உதவியாக இருக்கும்.

மொழியைப் பயன்படுத்துவதும், சூழ்நிலைக்கேற்ப ஒழுங்கமைக்கப்பட வேண்டும்: அன்றாட வாழ்க்கையில் ஒரு மொழியும், மாலைநேர உணவு நேரத்தில் அல்லது வீட்டுப்பாடவேலை செய்யும்போது அல்லது இரவு படுக்கைக்குப் போகும்போது, கதை கூறும்போது அடுத்த மொழியும் பேசப்பட வேண்டும். இம்முறையை "மொழித்தீவு செய்தல்" என்பர்.

உங்கள் பிள்ளை ஒன்று, இரண்டு அல்லது மூன்று மொழிகளுடன் வளர்வதாக இருக்கும் சந்தர்ப்பத்திலும், கீழ்க்காண்பவை முக்கியமானவை: அடிக்கடி பிள்ளையுடன் கதையுங்கள், அத்துடன் நல்ல பொறுமையுள்ள கேட்பவராக இருப்பதுடன், பிள்ளையைப் புகழுங்கள்!

## உங்களுக்குத் தெரியுமா?

நன்கு செவிமடுக்கின்ற பிள்ளை மட்டும்தான் நன்கு கற்க முடியும், ஒரு குழந்தையுடன் பேசும்போது, ஒரு மெல்லிய குரலில் கதைத்தால் அது விரைவாக எதிர்விளைவைக் காட்டும்.

# 5. என்னுடன் பேசுங்கள்; அத்துடன் நான் கூறுவதைக் கேளுங்கள்!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- நன்கு கேட்பது நன்கு கதைப்பதற்கான ஒரு முன் நிபந்தனை. ஒரு சுகதேகியான பிள்ளை ஆறு மாதங்களுக்குப் பின் "ஆஊ" என்று மேலும்மேலும் கதைப்பதுடன், சத்தங்களைக் கேட்டு அதுபோல் தானும் செய்ய வேண்டும், அத்துடன் தனக்குத் தானே "பேச" வேண்டும், அப்படியில்லாதிருப்பின், அதனது காது கேட்கும் திறனை மீண்டுமொருமுறை பரீட்சித்துப் பார்க்க வேண்டும்.

- கேட்கும்திறன் குறைந்த குழந்தைகளும் ஆரம்ப மாதங்களில் தாமாகச் சத்தங்களை உருவாக்குவர், காலப்போக்கில் அது மழுங்கிக் கொண்டே போகும்.

- மெல்லிய குரலில் அவர்களுடன் கதைக்கும் போது, அது குழந்தைகளின் அவதானிக்கும் தன்மையை உயர்த்துகின்றது. இவ்வாறாக ஒரு குழந்தையின் ஆரம்பப்பருவத்திலேயே ஒரு முதலாவது சிரிப்பை வரவழைக்க முடியும்.

## அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

### உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:

உங்கள் பிள்ளையைக் குறிப்பாக, 6 ஆம் மாதத்தின்பின் அவதானியுங்கள். இரைச்சல்களை உணர்கின்றதா? நீங்கள் அதனை அழைக்கும்போது அது தலையைத் திருப்புகின்றதா?

விளையாட்டுமணிக்கூடும், கிலுக்கிகளும் குழந்தைகளின் அவதானிப்புணர்வை விழிப்பூட்டுவதற்குக் குறிப்பாகப் பொருத்தமானவை.

**உங்கள் பிள்ளையுடன் அடிக்கடி நிறையப் பேசுங்கள், அப்போது, பிள்ளைக்கு நன்கு காது கேட்கின்றதா என்பது உங்களுக்கே தெரியும்.**

உங்கள் பிள்ளை போடுகின்ற சத்தங்களையும், "ஆஊ" என்று அது பேசுகின்ற மழலைமொழியையும், அது செய்வது போல் நீங்களும் திரும்பச் செய்யுங்கள். அந்தச் சிறிய குழந்தைக்கு, நீங்கள் அதனுடன் இப்போ என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்று விபரியுங்கள். பாட்டும், எதுகைமோனையுடன் கூடிய வசனங்களும் அனைத்துப் பிள்ளைகளாலும், எல்லா வயதிலும் மிகவும் விரும்பப்படுகின்றது.

குறிப்பாகக் காது சம்பந்தமான நோய் வந்தபின், குழந்தைகளை அல்லது சிறுபிள்ளைகளை அவசியம் பரிசோதனைக்குக் கொண்டு செல்ல வேண்டும்: உங்கள் உள்ளூராட்சிநிர்வாகப்பிரிவிலுள்ள அன்னையர்- தந்தையர் ஆலோசனை நிலையத்தில் அல்லது உங்கள் வைத்தியரிடம் செல்லுங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?

காதால் கேட்பது மட்டும் முக்கியமல்ல, தொட்டுணர்வது, பார்ப்பது, அனுபவப்படுவது, கைகளில் தூக்கிப் பார்ப்பது என, மொழி அனைத்துப் புலன்களாலும் கற்றுக்கொள்ளப்படுகின்றது.

# 6. அதை நானே செய்வேன்!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- கேட்டல், பார்த்தல், தொட்டுணர்தல், அசைதல், விளங்கிக்கொள்தல், அசைவினை உணர்தல், காந்தசக்தியை உணர்தல் போன்ற இன்னும் பல, ஒரு குழந்தைக்கு இவ்வுலகைப்பற்றி உணரவும் அதன் மூலம் இவ்வுலகை அறிந்து கொள்ளவும் உதவுகின்றன. இவ்வாறு அதனது உணர்வு, அறிவு, சமூக ஆற்றல்களையும் தனது மொழியையும் அது விருத்தி செய்கின்றது.

- உங்கள் குழந்தை "வழுவழுப்பு" அல்லது "கரடுமுரடு" என்றால் என்ன என்பதை, அது பொருட்களைத் தொட்டுப் பார்க்க முடியுமென்றால் அறிந்து கொள்ளும். "இனிப்பு" "புளிப்பு" என்பதை, அது சாப்பாட்டுப்பொருட்களைச் சுவைத்துப் பார்க்க முடியுமென்றால் அறிந்து கொள்ளும். மூலைகளையும், விளிம்புகளையும் அது ஊர்ந்து திரிந்தால்தான் கணிப்பிட முடியும். இவ்வாறு சொற்களுக்குப் பொருத்தமான புத்திசாலித்தனமான கருத்தைத் தனது தலைக்குள் கட்டியெழுப்பும்.

# அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

## உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:

உங்கள் பிள்ளையை அடிக்கடி உங்கள் கைகளில் ஏந்துங்கள்; அது தொடுதலை ஒரு இதமான செயலாக உணர இடங்கொடுங்கள்.

**உங்கள் பிள்ளைக்குப் பொருட்களைத் தொட, இறுக்கிப்பற்றிக்கொள்ள, தளரவிட வாய்ப்பளியுங்கள்! அதற்குக் கடிப்பதற்கு ஏதாவது கொடுங்கள்! இயலுமானளவு அதிகமானவற்றைத் தானே அனுபவப்பட வாய்ப்புக் கொடுங்கள்!**

சிறிது வளர்ந்ததும், இயலுமானளவு அதிகமான வேலைகளைத் தானே செய்து பார்க்க உங்கள் பிள்ளையை அனுமதியுங்கள்: வீட்டில், விளையாட்டிடத்தில் அல்லது தோட்டத்துக்குள் தவழ விடுதல், நடத்தல், மண்ணுடனும் தண்ணீருடனும் விளையாடுதல், அழைத்தலும் பாடுதலும், சமையலுக்கு உதவி செய்தல், மேசையில் கோப்பை, கரண்டி போன்றவற்றை ஒழுங்காக வைத்தல், தோட்டத்தில் மண் கிண்டுதல், மரம் நடுதல். இவ்வாறு அது விரைவாகவே சுயமாக இயங்கத் தொடங்கி விடும். இது பிள்ளைக்குப் பிற்காலத்தில் பாடசாலைக்காலத்தை இலகுவாக்கும்.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒரு பிள்ளையின் மொழிவிருத்திக்கும் அசைவு, விளையாட்டு, சத்துணவு, சொத்தை (சூத்தை)யில்லாத பற்கள் என்பவற்றுக்குமிடையில் ஒரு தொடர்பு இருக்கின்றது.

# 7. நீங்கள் நினைப்பதை விட, அதிகமாக என்னால் முடியும்!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- விளையாடுவதற்கும், அசைந்துதிரிவதற்கும் பிள்ளைகளுக்கு அனுபவம் தேவை. மொழி ஊக்குவிப்பு என்பது, பிள்ளைக்கு நிறைய ஒடியாடித்திரிய வாய்ப்பளிப்பது. பிள்ளை பாய்ந்து, துள்ளி, நடந்து, ஒடி, நடனமாட, ... வேண்டும். மொழியும் ஒடியாடித்திரிதலும் ஒன்றோடொன்று பிணைந்தவை.

- விளையாடும் போது பிள்ளையின் அசைவுகள், பிரத்தியேகமாக விரல்களின் நுண்ணசைவுகள் ஆற்றல் மிக்கவையாகின்றன, அப்போது வாய், நாக்கு என்பவற்றின் அசைவுகளும் மிகச் சரியானதாக மாறும்.

- சரியான பல்வரிசை முக்கியமானது, அதன்மூலம் பிள்ளை சரியாகப் பேசப்பழகக் கூடியதாக இருக்கும். ஒரு நல்ல விளங்கக் கூடியதான உச்சரிப்பும், நல்ல மொழியறிவும் ஒன்றுடனொன்று இணைந்தவை.

## அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

### உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:

உங்கள் பிள்ளையை உயரம் குறைந்த மதில்களில் சமநிலையைப் பேண, விரல்களினால் உண்ண, குழாயினால் உறிஞ்சிக் குடிக்க, பஞ்சு ஊத, ... அனுமதியுங்கள். அடிக்கடி விளையாட்டு மைதானத்-துக்கும், காட்டுக்குள்ளும் செல்லுங்கள். உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து கைவேலைகள் செய்யுங்கள் அத்துடன் பிள்ளையைக் கத்தரிக்கோலைப் பாவிக்க அனுமதியுங்கள். நீங்கள் அவ்விடத்தில் இருப்பீர்களாக இருந்தால், பயப்படும்படி எதுவும் நடக்காது. அதன்போது பிள்ளை துல்லியமான அசைவுகளைப் பயில்வதுடன், அதனது கற்பனைத்-திறனையும் விருத்தி செய்யும்.

**உங்கள் பிள்ளை இனிப்புப்பானங்களைக் குடிக்கத் தேவையில்லை. அதனால், அதனைப் பழக்காதீர்கள்!**

சரியான பல்வரிசையைக் கவனித்துக் கொள்-ளுங்கள். அதற்காக, உங்கள் பிள்ளையை 3 வயது மட்டுமே சூப்பியைப் (Schnuller) பாவிக்க அனுமதியுங்கள்.

சத்துணவும், பற்களால் கடிக்கக் கூடிய ஏதாவது பொருட்களும் முக்கியம்.

### உங்களுக்குத் தெரியுமா?

தினசரி ஒற்றாகவிருந்து கதைப்பதும், விளையாடுவதும் மொழிவளர்ச்சியில் பாரிய முன்னேற்றத்தைக் கொண்டுவரும்.

# 8. என்னுடன் விளையாடுகின்றீர்களா?

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- எவ்வளவுக்கதிகமாக நீங்கள் உங்கள் பிள்ளையுடன் செயற்படுகின்றீர்களோ, கதைக்கின்றீர்களோ, விளையாடுகின்றீர்களோ அவ்வளவுக்கு அதிகமாக, அதனது மூளையில் கட்டமைப்புகளும், தொடர்புப்பின்னல்களும் கட்டியெழுப்பப்படும். இக்கட்டமைப்புகளும், தொடர்புப்பின்னல்களும் பிள்ளையின் மொழிவளர்ச்சியையும் பிற்காலத்தில் பாடசாலையில் கற்பதை நிர்ணயிப்பவையாகவும், இருக்கும்.

- ஒரு பிள்ளை ஒழுங்கு தவறாது ஒரு மொழியையோ அல்லது பல மொழிகளையோ கேட்டலும் பேசுதலும், அப்பிள்ளைக்கு அம்மொழியின் ஒழுங்குகளைக் கண்டறிய உதவும். அது இவ்வாறு சொற்களைக் கற்பதுடன், மொழியினது இலக்கணத்தைக் கண்டுபிடித்துக் கற்பதுடன், மற்றவர்களுடன் சரியான முறையில் தொடர்புகொள்ளவும் முடியும். ஒவ்வொரு மொழிக்கும் நிறையக் கேட்டலும், தானே பேசுவதும் என்கின்ற "பசளை" தேவைப்படுகின்றது.

## அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

### உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:

பேசும்போதும் விளையாடும்போதும் உங்கள் பிள்ளையினுடைய கண்மட்டத்துக்குக் குனியுங்கள். உங்கள் பிள்ளையுடன் நேரடியாக – தினசரி குறைந்தது கால்மணிநேரமாவது, கதையுங்கள்!

பிள்ளையுடன் தினசரி நடவடிக்கைகளைப் பற்றிக் கதையுங்கள் - உதாரணமாக, பிள்ளை சப்பாத்து, ஜக்கட் கழற்றும் போது, கையுறைகள் அணியும் போது, ஒரு தேநீரைக் கொடுக்கும் போது, படுக்கைக்குப் போகும் போது, ... அறிவுறுத்தல்களும் கட்டளைகளும் மட்டும் போதாது!

**பேசும்போது போதியளவு பதிலீடான சொற்களைப் பாவியுங்கள். அப்போதுதான் உங்கள் பிள்ளைக்குத் தெரிந்த சொற்களின் அளவு விரிவுபடும். (உதாரணமாக ஒரு கருத்துக்குப் பொருத்தமான வேறுபட்ட சொற்களைப் பாவித்தல்: அழகு, வடிவு, நன்று, ...)**

எல்லா வயதிலும் பிள்ளைகளுக்கு ஒரே ஒலியுடன் கூடிய வசனங்களும் பாடல்களும் அவர்களது மொழிவள விருத்திக்கு ஒரு அற்புதமான ஊற்றாகும். உங்களுக்கு உங்களது பிள்ளைப்பருவப் பாடல்களும், எதுகைமோனையுடன் கூடிய வசனங்களும் ஞாபகத்துக்கு வராவிட்டால், உங்கள் பெற்றோரிடம் அல்லது உங்களை விட வயது கூடிய குடும்ப அங்கத்தவரிடம் கேளுங்கள் அல்லது ஒரு புத்தகத்தில் வாசித்துப் பாருங்கள் அல்லது உங்களது சுய வசனங்களையும், கதைகளையும் நீங்களாகவே உருவாக்குங்கள்.

### உங்களுக்குத் தெரியுமா?

ஒரு பிள்ளையை எப்போதும் திருத்திக்கொண்டும், திருத்திக் கூறியதை மீண்டும் அதேபோல் கூறு என்று வேண்டிக்கொண்டும் இருக்கக்கூடாது.

# 9. என்னைச் சாதாரணமாகப் பேச விடுங்கள்!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- திருத்தம் செய்வது, பேசுவதிலுள்ள சந்தோசத்தைத் தடுக்கும். இங்கு பிரயோசனமான நுட்பம் என்னவெனில், "திருத்தி மீண்டும் கூறுவது".
- பிள்ளைகள் தம்மால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் காட்டிக்கொள்ளமாட்டார்கள். அநேகமாக அவர்களுக்கு அதிகம் விளங்கியிருக்கும், ஆனால் குறைவாகவே கதைப்பார்கள். விதைகளுக்கு முளைப்பதற்குக் குறிப்பிட்ட காலம் தேவைப்படுவது போல, பிள்ளைகளுக்கும் நேரம் தேவை.
- பிள்ளைகள் இரண்டு மொழிகளுடன் வளர்பவர்களாக இருந்தால், ஒரு மொழியில் நன்கு ஆளுமையுள்ளவர்களாகவும், மற்றைய மொழியில் சிறிது ஆளுமை குறைந்தவர்களாகவும் இருப்பர். வாழ்வோட்டத்தில் அந்த நேரம் எது முக்கியமோ, அனுபவங்களுடன் எந்த மொழி பிணைந்திருக்கின்றதோ, அதற்கேற்ப மொழியின் ஆளுமையும் மீண்டும் மீண்டும் மாறும். டொய்ச்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிராத பிள்ளைகள் பாலர்வகுப்புக்குப் போகும்போது, டொய்ச் அல்லாத தாய்மொழி இரண்டாம் பட்சமாகப் போவதையும், டொய்ச் பேசுகின்ற நண்பர்கள் முக்கியமாவதையும், இரண்டு மொழி பேசுகின்ற பிள்ளைகளிடையே காணக்கூடியதாக இருக்கும்.

# அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

**உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:**

உங்கள் பிள்ளை எதையாவது பிழையாகப் பேசினால், அந்த வார்த்தையின் அல்லது அந்த வாக்கியத்தின் சரியான வடிவத்தை "கதை-யோட்டத்துடனிணைந்து" திரும்பக் கூறுங்கள். திரும்பக் கூறும்படி நிர்ப்பந்திக்காதீர்கள்.

ஒரு புதுச்சொல் மீண்டும் உடனடியாகப் பாவிக்-கப்படாத பட்சத்தில், அமைதியாக இருங்கள்.

**உங்களுக்குப் பொறுமை இருக்கின்றது! பிள்ளை மற்ற மொழியில் பதில் கூறினாலும், நீங்கள் உங்கள் மொழியில் பிள்ளையுடன் பேசுங்கள். ஒரு பிள்ளை இரண்டு மொழிகளுடன் வளரும் போது, இரண்டு மொழிகளில் ஒரு மொழியை, நீண்ட காலத்துக்குப் பாவிக்க விரும்பாமல் இருப்பதும் சிலவேளைகளில் நடைபெறும்.**

உங்கள் பிள்ளைக்கு அப்படியொரு சூழ்நிலை இருந்தால், அழுத்தத்தைப் பிரயோகிக்காதீர்கள் ஆனால், இரண்டு மொழிகளையும் பிள்ளை அவ்வப்போது பாவிக்கக் கூடிய பல சந்தர்ப்பங்களை உருவாக்குங்கள்.

## உங்களுக்குத் தெரியுமா?

மொழியூக்குவிப்பில், வாசித்துக் காட்டுதலும் அதுபற்றிப் பேசுதலும் மிக முக்கிய வடிவங்கள், இவை உங்கள் பிள்ளையைப் பாடசாலைக்கு நன்கு ஆயத்தப்படுத்தும்.

# 10. இன்று, எனக்குக் கதையைத் தொடர்ந்து வாசித்துக் காட்டுவீர்களா?

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- குழந்தையின் ஒரு வயதுக்குள்ளேயே பிள்ளைக்கு வாசித்துக் காட்டுதல், அதனது மொழிவளர்ச்சியில் நன்மையான விளைவை ஏற்படுத்துகின்றது என்பதை, அறிவியல் ஆய்வுகள் காட்டுகின்றன.

- வாசித்துக்காட்டுதலும், விபரித்தலும் பிள்ளையினுடைய மொழிவளத்தை விரிவுபடுத்துகின்றது. எழுத்துமொழி பேச்சுமொழியைவிட வித்தியாசமானதாக இருக்கின்றபடியால், வாசித்துக்காட்டுகின்றபோது, உங்கள் பிள்ளை எழுத்துமொழியை அறிந்து கொள்கின்றது. இதனால் வாசித்துக்காட்டுதலும், விபரித்தலும், வாசித்தலுக்கும் எழுதுவதற்குமான ஒரு நல்ல அடித்தளத்தை உருவாக்குகின்றன.

- கதைகளைக் கேட்டு அதனை மீண்டும் விபரிக்கக் கூடிய பிள்ளைகள், அதன்போது, பாடசாலையில் தமக்கு நன்மை பயக்கக் கூடிய பலவற்றைக் கற்றுக்கொள்கின்றனர்: உதாரணமாக, செவிமடுத்துக் கேட்டல், கிரகித்தல், ஒரு சம்பவத்தை ஞாபகப்படுத்தல், புதிய சொற்கள், புதிய வாக்கிய வடிவங்கள் அத்துடன் இன்னும் பல.

## அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

### உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:

உங்கள் பிள்ளைக்குப் படப்புத்தகங்களிலிருந்தும் கதைப்புத்தகங்களிலிருந்தும், நீங்கள் வீட்டில் பிள்ளையுடன் பேசுகின்ற மொழியில் அல்லது மொழிகளில்; - தினசரி எதையாவது வாசித்துக் காட்டுங்கள்.

**அனேகமான நூலகங்களில், வெவ்வேறுபட்ட மொழியிலுள்ள படப்புத்தகங்களையும், கதைப்புத்தகங்களையும் நீங்கள் கடனாகப் பெற்றுக்கொள்ளலாம். நீங்கள் வசிக்குமிடத்திலுள்ள நூலகத்தில், உங்கள் மொழிப்புத்தகங்களும் இருக்கின்றனவா என்று கேட்டுப்பாருங்கள்.**

பிள்ளைகளுக்கு வழமையாகச் செய்யப்படும் விடயங்கள் பிடிக்கும்! உங்கள் பிள்ளைக்கும்தான். இரவுப்படுக்கைக்குப் போகும்போது கதை கேட்பது ஒரு வழமையான காரியமாகலாம். பிள்ளை-களுக்கு, ஒரே கதையை முற்றாக விளங்கிக்-கொண்டு, அதனை மீண்டும் விபரிக்குமட்டும் திரும்பத் திரும்பக் கேட்பது விருப்பமாக இருக்கும். உங்கள் பிள்ளைக்கு அதனைப் பின்பு விபரிப்பதற்கு, உதாரணமாக ஊக்கமளிக்கக் கூடிய வினாக்களை கேட்பதன் மூலம் ஆதரவளியுங்கள்.

உங்களுக்கு இன்னும் நன்றாக டொய்ச் தெரியாவிட்டாலும் கூட, நீங்கள் உங்கள் பிள்ளைக்கு டொய்ச்மொழியிலுள்ள படப்புத்தகங்களை வாசித்துக் காட்டலாம்.

பாட்டன், பாட்டிகளும் மற்றைய நம்பிக்கைக்குரிய மனிதர்களும் நல்ல கதை கேட்பவர்களாகவும் கதை கூறுபவர்களாகவுமிருப்பர்.

## உங்களுக்குத் தெரியுமா?

பிள்ளைகள் தொலைக்காட்சியில் அல்லது கணினியில் கற்பதில்லை; விளையாடும்போதும், ஒன்றாயிருந்து செய்யும்போதும் நன்றாகக் கற்பார்கள்.

# 11. தொலைக்காட்சி? வேண்டாம், நன்றி! அம்மாவும் அப்பாவும் என்னுடன் விளையாடுவது, எவ்வளவோ நல்லது!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- மொழியைப் பயில்வதற்கு, பிள்ளைகள் மொழியின் ஒலிவடிவத்தை மட்டும் கேட்டால் போதாது, கூறப்பட்ட விடயத்தின் கருத்தையும் விளங்கிக்கொள்ள வேண்டும்: விடயத்தைப் "பிடித்துக்கொள்ள" வேண்டும்.

- பிள்ளை, மற்றைய மனிதருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்போதுதான் மொழியைப் பயில முடியும்: தாய் தந்தையுடன், பெரிய குடும்பங்களில் சகோதரங்களுடன், பிற்பாடு நண்பர் நண்பிகளுடன்.

- நல்ல சிறுவர்படங்களைப் பெற்றோருடனிருந்து பார்ப்பது நல்லது. மணித்தியாலக்கணக்கில் தொலைக்காட்சி பார்த்தல் அல்லது கணினியில் விளையாடுவது சேதம் விளைவிக்கக் கூடியது. இதன்போது பிள்ளைகள் குறைவாகத்தான் கற்கின்றார்கள்.

# அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

**உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:**

அன்றாட நடவடிக்கையில் உங்கள் பிள்ளை பங்குகொள்ள அனுமதியுங்கள்.

புதிய சொற்களைக் கைகளால் அறிய, பிள்ளைக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். சமையலின் போதும், உணவுப்பொருட்களை வெதுப்பும் போதும் உதவுதல், தண்ணீர், மணல், கற்கள் அல்லது பிளாஸ்டிக் போன்றவற்றுடன் விளையாடுதல் போன்றவை பிள்ளைகளின் வளர்ச்சியின் போது, தொலைக்காட்சியை விட உந்துதலளிக்கக்கூடிய பொருத்தமான விடயங்களாகும்.

**உங்கள் பிள்ளை தொலைக்காட்சி பார்ப்பதாக இருந்தால், நீங்கள் ஒரு படத்தைத் தேர்ந்தெடுத்து, பிள்ளை பார்த்ததைப் பற்றி, அதனுடன் பேச வேண்டும். அப்போது பிள்ளை நன்கு விளங்கிக்கொள்வதுடன், புதிய சொற்களையும் கற்றுக்கொள்கின்றது.**

விளையாட்டுப்பொருட்களைக் கடன்பெறும் நிலையத்தில் (Ludothek) நிறைய நல்ல விளையாட்டுக்களை நீங்கள் கடனுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். இதன்மூலம், நீங்கள் வெவ்வேறுவிதமான புதிய உற்சாகமூட்டக்கூடிய விடயங்களைக் குறைந்த செலவில் உங்கள் பிள்ளைக்கு வழங்கலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

சிறுபராயத்திலிருந்தே டொய்ச் பேசக்கூடிய ஒரு நண்பியோ அல்லது ஒரு நண்பனோ இருந்தால், அல்லது பாலர்விளையாட்டுக்குழு (Spielgruppe) வுக்கு அல்லது பாலர்பாடசாலைக்குச் செல்வதாக இருந்தால், பிள்ளைகளால் நன்றாக டொய்ச்மொழியைக் கற்கக்கூடியதாக இருக்கும்.

# 12. எனக்கும் வேறு பிள்ளைகளுடன் ஒன்றாக இருக்க விருப்பமாக இருக்கின்றது!

## இதுபற்றி நிபுணர்கள் என்ன கூறுகின்றார்கள்?

- நல்ல டொய்ச் அறிவு உங்கள் பிள்ளைக்கு முக்கியம்: அதனது வாழ்க்கைக்கும், நன்கு கல்வி கற்பதற்கும், தொழிலுலகில் ஒரு நல்ல சந்தர்ப்பத்தைப் பெறுவதற்கும்.

- டொய்ச்மொழியை நன்கு பயில்வதற்கு, அம்மொழியைக் கேட்பதற்கும் கதைப்பதற்குமான பன்முகப்பட்ட வாய்ப்புகளும் ஊக்குவிப்புகளும் உங்கள் பிள்ளைக்குத் தேவைப்படுகின்றது. நன்கு டொய்ச் பேசுகின்ற நண்பர்களும் நண்பிகளும் மிக நல்ல உந்துசக்தியாகும்.

- பாடசாலைக்குச் செல்லும் வரையும் ஒழுங்கு தவறாமல் விளையாட்டுக்குழுவுக்கு அல்லது பாலர்பாடசாலைக்குச் செல்வதனால், டொய்ச்மொழியை ஆழமாகப் புரிந்துகொள்வதற்கும், பாடசாலைக்குச் செல்வதற்குத் தேவையான நிபந்தனைகளை நிறைவேற்ற ஆயத்தப்படுத்தவும், பிள்ளைக்குப் போதிய அவகாசம் இருக்கும். இந்த வாய்ப்பு உங்கள் பிள்ளைக்கு கிடைத்தால், உங்கள் குடும்பமொழி டொய்ச்சாக இல்லாத பட்சத்திலும், உங்கள் பிள்ளையால் இந்த மொழியை நன்கு கற்க முடியும்.

## அன்றாட வாழ்க்கைக்கான குறிப்புகள்

**உங்கள் பிள்ளைக்கு, குறிப்பாக நீங்கள் செய்யக் கூடியது:**

உங்கள் பிள்ளை நண்பிகளை, நண்பர்களைச் சந்திக்கப் போக விரும்பினால் அல்லது உங்கள் வீட்டுக்கு அழைக்க விரும்பினால், அதற்கு ஆதரவு வழங்குங்கள். அன்றாட வாழ்க்கைக்கு முக்கிய-மான மொழியைப் பிள்ளைகள் சாதாரணமாக, மிக விரைவாகக் கற்றுக் கொள்வார்கள்.

உங்கள் பிள்ளையை இரண்டரை - மூன்று வயதுக்-குள்ளேயே பாலர்விளையாட்டுக்குழுவுக்கு விண்ணப்-பியுங்கள். இந்த வயதில் பிள்ளைகள் புதிய நண்-பர்களையிட்டுச் சந்தோசப்படுவதுடன் அவர்களுடன் விளையாடி, நடவடிக்கைகளில் ஈடுபடும் அளவுக்கு அநேகமாக முதிர்ச்சியடைந்திருப்பார்கள்.

**தொழில் காரணமாக அல்லது பழக்கவழக்கத்தைக் கருத்திற்கொண்டு, பிள்ளைகளைப் பராமரிக்கும் இடம் ஒன்றுக்கு குழந்தைப் பராயத்திலிருந்தே அனுப்ப நீங்கள் தீர்மானித்தால், அங்கும் மொழி கற்கும் சாத்தியமுள்ளது.**

வீட்டில் உங்கள் பிள்ளையுடன் டொய்ச் அல்லாத வேறு ஒரு மொழியை நீங்கள் பேசுவதாக இருந்-தால், பாலர்விளையாட்டுக்குழுவில் அல்லது பாலர்பாடசாலையில் கற்றுக்கொள்ளப் போகும் டொய்ச்மொழியை ஆயத்தப்படுத்துவதற்காக, வீட்டில் புதுமொழியாக நீங்கள் அதனை அறிமுகப்-படுத்தலாம். அதுபற்றிப் பிள்ளையுடன் கதைத்து அதற்கு ஆர்வமூட்டுவதுடன், அதனது புதிய சூழலில் பயன்படுத்தக்கூடிய இலகுவான சொற்களைச் சொல்லிக் கொடுங்கள்.

**பல மொழிகளைப் பேசுவது அற்புதமானது என்பதைப் பிள்ளைக்கு எடுத்துக் கூறுங்கள்.**

## இன்னும் உங்கள் மனதில் நாம் பதிய வைக்க விரும்புவது ...

மொழியில் நாம் மூலதனமிடாவிட்டால், அது தொலைந்து போய்விடும். ஒரு மொழியை நாம் மறந்துவிடாதிருக்க, அதனைப் பேணுவதுடன் அதனைப் பாவிக்கவும் வேண்டும்.

உங்கள் பிள்ளை பாலர்பாடசாலையின் பிற்பாடு பாடசாலைக்குப் போகும்போது, டொய்ச் பிள்ளையினது முக்கிய மொழியாக மாறும். அப்போது, அதற்கு உங்களது ஊக்குவிப்பும் ஆதரவும் தேவை. ஆனால், உங்கள் சுயமொழியை அல்லது குடும்பமொழியைப் பேண மறந்துவிடாதீர்கள்.

பாடசாலையில் தாய்மொழியும் கலாச்சாரமும் (HSK) என்கின்ற பாடம், முதல்மொழியைத் தொடர்ந்தும் ஊக்குவிப்பதற்கான ஒரு நல்ல வாய்ப்பாகும். அதுபற்றி விசாரித்து, உங்கள் பிள்ளையையும் அதற்கு விண்ணப்பியுங்கள்.

புதினப்பத்திரிகைகளையும் புத்தகங்களையும் நீங்களும் வாசிப்பதுடன், புதிய விடயங்கள் பற்றி உங்கள் பிள்ளையுடன் பேசுங்கள்! இவ்வாறு நீங்களும் உங்கள் பிள்ளையும் உங்கள் மொழியறிவை வளர்க்கலாம்.

உங்கள் பிள்ளையை – டொய்ச்மொழியிலும் வேறு மொழிகளிலும் நிறைய வாசிக்க, ஊக்குவியுங்கள்.

ஒவ்வொரு மொழியும் ஒரு செல்வம். எந்தளவுக்கு நன்றாகப் பராமரிக்கப்பட்டு விருத்தியடைகின்றதோ, அவ்வளவுக்கு அதன் பெறுமதியும் உயரும். மொழிகளை நன்கு சரளமாகப் பேசுவது, இன்று ஒரு மனிதனது தொழிலையும், சமூகத்தில் அவனது தரத்தையும் நிர்ணயிக்கின்றது.

செங்காளனில் (St.Gallen) வாழுகின்ற குடியேற்றவாசிகளின் தாய்மொழிகளான – அல்பானிய,பொஸ்னிய /குரேஷிய /சேர்பிய, இத்தாலிய, துருக்கிய, போர்த்துக்கேய, தமிழ் அத்துடன் மேலும் பல மொழிகள் பொருளாதார உலகமயமாக்கலில் மேலும் மேலும் தேவைப்படுகின்ற மொழிகளாகின்றன. டொய்ச்மொழியுடன் வேறு ஒரு மொழியிலும் நன்கு பரீட்சயம் இருந்தால், தொழிலுலகில் உங்கள் பிள்ளைக்கு நல்ல சந்தர்ப்பங்கள் கிடைக்கும்.

# St.Gallen மாநிலத்தில் பெற்றோருக்கான ஆலோசனைக்கும் ஆதரவுக்குமான நிறுவனங்களும் வாய்ப்புகளும்

**உள்ளூராட்சி மன்றம் (Gemeinde)**

பிள்ளைப்பராமரிப்பு, பாலர் விளையாட்டுக்குழுக்கள், பாலர்பாடசாலைகள் பற்றிய தகவல்களை உங்கள் வசிப்பிடத்திலுள்ள உள்ளூராட்சி மன்றத்திலேயே பெற்றுக் கொள்ளலாம்.

**பிள்ளைக்கான கிழக்கு மாநில சுவிஸ் மக்கள் கழகம் (Ostschweizer Verein für das Kind)**

இக் கழகமானது பாடசாலைக்குச் செல்லும் வயதையடையாத பிள்ளைகளின் நலனையும் ஆரோக்கியத்தையும் அன்னையர் தந்தையருக்கு ஆலோசனையும் ஆதரவும் வழங்குவதனூடாக ஊக்குவிக்கின்றது. அன்னையர் - தந்தையர் ஆலோசனையில் உங்கள் சிசுவினதும் சிறுவர் சிறுமியரதும் ஆரோக்கியம், சத்துணவு, வளர்ச்சி, பிள்ளை வளர்ப்பு சம்பந்தமான அனைத்து வினாக்களையும் நீங்கள் வினாவலாம். அதுமட்டுமல்லாமல், மற்றைய பெற்றோருடனும் நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்ப்பமும் கிடைக்கின்றது.

www.ovk.ch

**பெற்றோருக்கும் 0 தொடக்கம் 3 வயது வரையான குழந்தைகளுக்குமான குழந்தைகள் சந்திப்பு நேரம் (Baby-Sprechstunde)**

பெற்றோர் தமது சிறிய பிள்ளைகளின் வளர்ச்சியை அல்லது அவர்களது நடத்தையையிட்டுக் கவலைப்படும் பட்சத்தில், இந்த ஆரம்ப மையத்துடன் தொடர்பு கொள்ளலாம். இங்கு பிள்ளைகளின் தேவைகள் கண்டறியப்படுவதுடன், புதிய தீர்வுகளும் ஆராயப்படும்.

www.kjpd-sg.ch

**St.Gallen பிள்ளைகள் பாதுகாப்பு நிலையம் (Kinderschutzzentrum)**

தமது சிறிய பிள்ளைகளின் வேண்டுதல்களால் தாம் அளவுக்கதிகமாக எதிர்பார்க்கப்படுவதாக உணர்வதுடன் தம்மால் இதற்கு மேல் முடியாது என்னும் நிலையிலுள்ள பெற்றோர், பெற்றோர் - தொடர்பு வலயமான TATKRÄFTIG உடன் தொடர்பு கொள்ளலாம். St.Gallen பிள்ளைகள் பாதுகாப்பு நிலையம், சம்பந்தப்பட்ட நபருக்கு அநாமதேயமாகவும், இலவசமாகவும், இரகசியமாகவும் ஆலோசனை வழங்குகின்றது.

www.tatkraeftig.ch

**பிள்ளை வளர்ப்பு ஆலோசனை (Erziehungsberatung)**

குடும்ப ஆலோசனை மையங்கள், பிள்ளை வளர்ப்பு சம்பந்தப்பட்ட சவால்கள் நிறைந்த வினாக்களின் போது, உங்களுக்கு ஆதரவு வழங்குவதுடன், சிரமமான சூழ்நிலைகளான உதாரணமாக அச்சம், அதீத சுறுசுறுப்பு, சகோதரங்களுக்கிடையிலான முரண்பாடுகள், சக வயதினருடன் அனுசரித்துப் போவதில் பிரச்சினைகள் போன்றவற்றில் தீர்வுகளைத் தேடுவதற்கும் உங்களுக்கு உதவுகின்றன.

www.sozialberatung.sg.ch

**பாடசாலை உளவியல் சேவைகள் (Schulpsychologische Dienste)**

பாடசாலை உளவியல் சேவைகள், பாடசாலைக் கல்வி சம்பந்தப்பட்ட உளவியல் சம்பந்தமான வினாக்களுக்கும் அல்லது பிள்ளை வளர்ப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளின் போதும் உங்களுக்காக சேவைகளை வழங்க காத்திருக்கின்றன.

www.schulpsychologie-sg.ch (Kanton St.Gallen)
www.schulgesundheit.stadt.sg (Stadt St.Gallen)

**நூல்நிலையங்களும் விளையாட்டுப்பொருட்கள் கடன் வழங்கும் நிலையங்களும் (Ludotheken)**

பிள்ளைகளுக்கு புத்தகங்களையும் விளையாட்டுப்பொருட்களையும் கடனாக வழங்கும் நூல்நிலையங்களையும் விளையாட்டுப்பொருட்கள் கடன் வழங்கும் நிலையங்களையும் நீங்கள் பல இடங்களில் காணலாம். மேலும் மேலும் பல நூல்நிலையங்கள், பல மொழி நூல்களைப் பெறும் வசதிகளை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக St.Gallen நகரத்தின் வாசகர்கள் தமக்குத் தேவையான நூல்களைத் தாமே தேடி எடுக்கும் கலாச்சாரங்களுக்கிடையிலான நூல்நிலையம்.

www.freihandbibliothek.ch
www.ludosg.ch

## பதிப்புரை


| | |
|---|---|
| வெளியீட்டாளர் | Kompetenzzentrum Integration und Gleichstellung<br>Departement des Innern des Kantons St.Gallen<br><br>செங்காளன் (St.Gallen) மாநிலத்துக்காக வேலைப்பயன்பாட்டு அனுமதியும் சுவீகாரமும்:<br>Kompetenzzentrum Integration und Gleichstellung, Departement des Innern<br>வசன சேர்க்கைகளும் நூலாசிரியையும்: Kathrin Wirz |
| மொழிகள் | டொய்ச், அல்பானிய, பொஸ்னிய /குரேஷிய /சேர்பிய, ஆங்கில, பிரெஞ்சு, இத்தாலிய, போர்த்துக்கேய, ஸ்பானிய, தமிழ், திக்றீனிய, துருக்கிய – மொழிகள் |
| மொழிபெயர்ப்பு/வடிவமைப்பு | www.alscher.ch |
| அச்சகம் | Tschudy Druck AG, St.Gallen |
| பிரசுரங்களைக் கோருவதற்கு | Departement des Innern<br>Kompetenzzentrum Integration und Gleichstellung<br>Regierungsgebäude<br>9001 St.Gallen<br>info.kig@sg.ch |
| பதிவிறக்கம் செய்வதற்கு | www.integration.sg.ch |

St.Gallen, Januar 2014


## எண்ணக்கருவும் திட்டமும்


இக்கையேட்டின் உட்கரு, Vorarlberg மாநிலத்தின் பணிப்புக்கமைய "பல மொழிகள். குழந்தைப்பருவத்தின் ஆரம்பத்திலிருந்தே மொழி ஊக்குவிப்பும் பன்மொழித் தன்மையும் - ஆரம்பத்திலிருந்தே கற்பிக்கும் குடும்பங்களுக்கும் நிறுவனங்களுக்கும் ஒரு சவால்" என்னும் செயற்திட்டத்துக்காக விருத்தி செய்யப்பட்டது. நிகழ்வு பற்றிய தகவல்கள்: www.okay-line.at

| | |
|---|---|
| உள்ளடக்கத்துக்கான அடிப்படை | Elisabeth Allgäuer-Hackl, Gerlinde Sammer, Elizabet Hintner |
| எழுத்தாக்கம் | Elisabeth Allgäuer-Hackl, Lidwina Boso |
| ஆசிரியர் | Eva Grabherr |



© okay. zusammen leben / Projektstelle für Zuwanderung und Integration, Vorarlberg (Verein Aktion Mitarbeit), Dornbirn (Österreich) November 2010